FRH Register No. [ | | | | | | | ]

5090-21

(For the candidates admitted from 2009-10 to 2016-17)

**B.A.B.L./B.A.LL.B. DEGREE EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Five-year Regular Course)

Third Year – Sixth Semester

**LABOUR LAW – I**

Time : Three hours Maximum : 100 marks

**PART A** — (3 × 12 = 36 marks)

**Answer THREE of the following in not exceeding six pages each.**

பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

1. Define "workman" under the Industrial Disputes Act, 1947. Examine the tests evolved by the courts to determine master and servant relationship.
   1947-ம் ஆண்டு தொழிற்துறை சச்சரவுகள் சட்டத்தின்கீழ் ''பணியாளர்'' என்பதை வரையறை செய்க. எஜமானருக்கும் ஊழியருக்கும் உள்ள உறவை வரையறுக்க நீதிமன்றங்களால் உருவாக்கப்பட்ட தகுதிச் சான்களை ஆராய்க.

2. Evaluate the provisions relating to constitution of labour court and its powers and jurisdiction.
   தொழிலாளர் நீதிமன்றத்தின் அமைப்பு, அதிகாரம் மற்றும் ஆள்வரை வரம்பு ஆகியன குறித்தான சட்டவகையங்களை மதிப்பீடு செய்க.

3. Examine the procedure for fixing and revising minimum wages under the Minimum Wages Act, 1948.
   1948-ம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியங்கள் சட்டத்தின் கீழ் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்கின்ற மற்றும் மாற்றியமைக்கின்ற முறையினை ஆராய்க.

4. Mention the deductions authorized by the Payment of Wages Act, 1936.
   1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டக் கழிவுகளை குறிப்பிடுக.

5. What is collective bargaining? Explain the advantages and disadvantages in collective bargaining.
   கூட்டுப் பேரம் என்றால் என்ன? கூட்டுப் பேரத்தின் நன்மைகள் மற்றும் தீமைகள் குறித்து விளக்குக.

**PART B** — (8 × 6 = 48 marks)

6. **Write short answers on EIGHT of the following in not exceeding two pages each:**
   பின்வருவனவற்றுள் எட்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் குறுகிய விடைகள் எழுதுக:

   (a) Retrenchment.
   ஆட்குறைப்பு

   (b) Unfair Labour Practices.
   நேர்மையற்ற தொழில் நடைமுறைகள்

   (c) Disciplinary proceeding.
   ஒழுங்கு நடவடிக்கை

(d) Wage Board.
ஊதிய வாரியம்

(e) National tribunal.
தேசிய தீர்ப்பாயம்

(f) Labour arbitration.
தொழிலாளர் இசைவு தீர்ப்பு

(g) Period of operation of the award.
தீர்வம் அமுலிலிருக்கும் காலம்

(h) Impact of Illegal Strike and Illegal Lockout.
சட்ட விரோதமான வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்பின் பின் விளைவுகள்

(i) Payment of Wages Authority.
ஊதியம் வழங்கல் குறித்த அதிகார அமைவு

(j) Privileges and Immunities of a Registered Trade Union.
தொழிற்சங்கங்களின் சிறப்புரிமைகளும் விலக்களிப்புகளும்.

## PART C — (4 × 4 = 16 marks)

**Answer FOUR of the following (in not exceeding two pages each) by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Kamal, a worker employed in a textile mill was dismissed for having taken part in an illegal strike for the second time. Is the dismissal of the worker justified?
ஜவுளி ஆலை ஒன்றில் பணிபுரியும் கமல் என்ற தொழிலாளி இருமுறை சட்டவிரோத வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டார் என்பதால் பணிநீக்கம் செய்யப்பட்டார். தொழிலாளியின் பணி நீக்கம் நியாயமானதா?

8. Tirumala Devasthanam has a laddu production unit with 250 employees. An industrial dispute between the Devasthanam and its employees was referred by the Government to Industrial Tribunal for adjudication. Devasthanam raised an objection that the laddu production unit was not industry as it satisfies the religious needs of the devotees. Decide.
திருமலா தேவஸ்தானத்தில் 250 பணியாளர்களை கொண்ட லட்டு தயாரிக்கும் பிரிவு ஒன்றுள்ளது. தேவஸ்தானத்திற்கும் அதன் பணியாளர்களுக்குமிடையே எழுந்த தொழிற்துறை சச்சரவு ஒன்றினை கட்டாயத் தீர்விற்காக தொழிற்துறை தீர்ப்பாயத்திற்கு அரசு அனுப்பிவைத்தது. பக்தர்களின் மதத்தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் லட்டு தயாரிக்கும் பிரிவு இருப்பதால், அது ஒரு தொழிற்சாலை அல்ல என்ற ஆட்சேபனையை தேவஸ்தானம் எழுப்பியது. முடிவு காண்க.

9. The service rules of Hindustan Bank prescribed a departmental test for confirmation of its employees in their service. Sundar, an employee of the bank was terminated from the service on the ground that he did not pass the test. Sundar claimed retrenchment compensation. Decide.
தனது பணியாளர்கள் தங்களது பணியில் நிரந்தரம் செய்யப்படுவதற்கு துறைத் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் என்று ஹிந்துஸ்தான் வங்கியின் பணி விதிகள் நிர்ணயம் செய்திருந்தது. வங்கி பணியாளர்களில் ஒருவரான சுந்தர் என்பவர் அத்தேர்வில் தேர்ச்சி பெறவில்லை என்ற காரணத்தால் பணிநீக்கம் செய்யப்பட்டார். சுந்தர் தனக்கு ஆட்குறைப்பிற்கான இழப்பீடு வழங்க வேண்டும் என்று கோரினார். முடிவு காண்க.

10. An organization was run by some Philanthropists for the care and up keep of animals, which include cows and other milk cattle. The original capital came entirely from public subscriptions and donations. A large part of the expenditure is met by public donations, but an increasing part of the present income is now derived from the sale of milk and milk products to the public. For carrying on its activities the establishment has engaged several employees. Is this establishment an Industry.

ஒரு அமைப்பின் கீழ் சில தாராளர்கள் மாடுகள் மற்றும் கறவை இனங்கள் அடங்கிய இதர மிருகங்களையும் பாதுகாத்து மற்றும் பராமரிப்பு செய்து வந்தனர். அதனுடைய ஆரம்ப மூலதனமானது பொதுமக்களிடையேயிருந்து பெறப்பட்ட நன்கொடை மற்றும் சந்தா தொகையிலிருந்து முழுமையாக பெறப்பட்டதாகும். பெருவாரியான செலவினங்கள் பொது நன்கொடையிலிருந்து செலவு செய்யப்பட்ட போதிலும் அந்த அமைப்பின் தற்போதைய வருமானமானது பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை மூலம் பெறப்பட்டதாகும். அந்த அமைப்பின் பணிகளைச் செய்வதற்காக பல பணியாட்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தார்கள். இந்த அமைப்பினை தொழிற்சாலை என்று கூறலாமா?

11. Kamala was employed as clerk in Global bank for one year. Accordingly she was terminated from the services on completion of one year. Kamala claimed retrenchment compensation. Decide.

குளோபல் வங்கியில் எழுத்தராக கமலா என்பவள் ஒரு ஆண்டு காலத்திற்கு பணியமர்த்தப்படுகிறார். அதன்படி ஒரு ஆண்டு முடிந்தவுடன் அவள் பணிநீக்கம் செய்யப்படுகிறார். கமலா தனக்கு ஆட்குறைப்பிற்கான இழப்பீடு தர வேண்டும் என்று கோரினாள். முடிவு காண்க.

12. Fifteen (15) workmen of a biscuit factory applied for registration to the registrar of trade union. While the application was pending (9) nine of the workmen wrote letter to the registrar stating that they are unwilling and withdrawing their association with the trade union. The registrar refused to register the trade union. Decide.

பிஸ்கட் ஆக்கத் தொழிலகத்தில் பணிபுரியும் பதினைந்து பணியாளர்கள் (15) தங்கள் தொழிற்சங்கத்தினை பதிவு செய்யத் தொழிற்சங்க பதிவாளருக்கு மனுச் செய்கின்றனர். அம்மனு பரிசீலனையில் இருக்கும்போது ஒன்பது (9) பணியாளர்கள் விருப்பம் இல்லை என்று விலகுவதாக பதிவாளருக்கு தெரிவிக்கின்றனர். தொழிற்சங்கப் பதிவாளர் அந்தத் தொழிற்சங்கத்தைப் பதிவு செய்ய மறுக்கின்றார். முடிவு செய்க.